# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் - 03.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 6526/F/2023**

திரு. M.S.சுதாகர் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணைவட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்-635 601
திருப்பத்தூர் மாவட்டம் .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 02.03.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | - |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 05.04.2023 |

*******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட இவ்வழக்கு இன்று (03.04.2025) இவ்வாணையத்தால் நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. M.S.சுதாகர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி சி தேன்மொழி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் திருப்பத்தூர் மாவட்டம் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கிராம உதவியாளர் பணி நியமனம் செய்ததில் மாற்றுத்திறனாளி பிரிவில் இந்து அருந்ததியர் சாதியைச் சேர்ந்தவருக்கு முன்னுரிமை உள்ளதா இல்லையா மற்றும் எனக்கு ஏன் பணி வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பது போன்ற முழு விவரங்களை 21 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்த பின்னரும் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் நாளதுவரை மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்படாததால், மனுதாராரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (03.04.2025) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண். மூ.மு.அ2/225/2023 நாள் 18.04.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்க தயாராக இருப்பதாக தெரிவித்து அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/(மா.செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6526/F/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்-635 601
திருப்பத்தூர் மாவட்டம்

**<u>மனுதாரர் SA 6526/F/2023</u>**

திரு. M.S.சுதாகர்
மரிமாணிகுப்பம் கிராமம் அஞ்சல்,
மிட்டூர் வழி,திருப்பத்தூர் வட்டம்,
திருப்பத்தூர் மாவட்டம்-635 710

Copy to: File
VPS /PA /15.04.2025